செய்தி வெளியீடு எண்–962 நாள்– 7.11.2008

## சிப்காட் நிறுவன வரலாற்றில் மகத்தான சாதனை!

## அரசுத் துறை நிறுவனங்கள் எதுவும் இதுவரை வழங்காத அளவில் 14 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஆதாயப் பங்குத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கியது!

தமிழக அரசின் சிப்காட் நிறுவனம் 1971 ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதிய தொழில் வளாகங்களையும், தொழிற்பூங்காக்களையும், தொழில் மையங்களையும் உருவாக்கி, அவற்றின்மூலம் பிரம்மாண்டமான பல தொழிற்சாலைகள் ஏற்பட உதவி வருவதுடன் இலட்சக்கணக்கான தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும் முக்கிய இடம் பெறுகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய தொழில் முதலீட்டாளர்களையும், வெளிநாடுகளைச் சார்ந்த பல தொழில் மேம்பாட்டாளர்களையும் ஈர்த்துத் தமிழகத்தில் தொழில் முதலீடுகளுக்கு ஊக்கமளிப்பதன்மூலம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்நிறுவனம் கணிசமான வகையில் உதவி வருகிறது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்டுள்ள சிப்காட் நிறுவனம் 2005–2006ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு 10 சதவீத ஆதாயப் பங்குத் தொகையாக 5 கோடியே 79 இலட்சம் ரூபாயை வழங்கிய நிலையில்;

2006இல் இந்த அரசு அமைந்தபிறகு தொழில்வளர்ச்சிக்கு அளித்துவரும் அளப்பரிய ஊக்கம் காரணமாக 2006–2007 ஆம் ஆண்டில் 329 கோடியே 90 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டி, 20 சதவீத ஆதாயப் பங்குத் தொகையாக தமிழக அரசுக்கு 11 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கியது. 2007–2008 ஆம் நிதியாண்டில், முந்தைய ஆண்டினைவிட அதிகமாக 364 கோடியே 93 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டி, நிகர இலாபமாகிய 96 கோடியே 66 இலட்சம் ரூபாயில் 25 சதவீத ஆதாயப் பங்குத் தொகையை தமிழக அரசுக்கு வழங்கிட முடிவு செய்தது. அதன்படி, 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சிப்காட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ந. கோவிந்தன் இன்று வழங்கினார்.

இதன்மூலம், தமிழக அரசு நிறுவனங்கள் சார்பாக இதுவரை எந்த ஆண்டிலும் வழங்கப்படாத அளவுக்கு மிக அதிகமான ஆதாயப் பங்குத் தொகையை தமிழக அரசுக்கு வழங்கிச் சிப்காட் நிறுவனம் மகத்தான சாதனை படைத்துள்ளது.

இந்நிகழ்வின்போது, தலைமைச்செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு. எம்.எப். பரூக்கி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மககள் தொடர்புத்துறை, சென்னை–9.